# பொதுக்காலம் 32ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

விழிப்பாயிருந்து இயேசுவின் வருகையை எதிர்கொண்டு மகிழ்வித்திட இன்றைய ஞாயிறு திருப்பலி நம்மை அழைக்கிறது.

முன்மதியுடையவராய் வாழவே இயேசு அழைக்கிறார். அறிவுக்கூர்மையை மட்டும் கொண்டிராமல், காலத்திற்கேற்ற செயல்பாடுகளை மேற்கொள்வதே விழிப்பாயிருப்பதன் வெளிப்பாடு. நாமும் விழிப்பாயிருந்து இறைவனை எதிர்கொள்வோம்.

இன்றைய முதல் வாசகத்தில், ஞானத்தின் மேன்மையையும், அதைத் தேடி அடைதலுக்கான வேட்கையையும் வெளிப்படுத்துகிறது சாலமோன் ஞான நூலின் வார்த்தைகள். ஞானம் ஒளிமிக்கது, மங்காது. ஞானம் பெற்றவன் பெரும் பேறுபெற்றவனாவான். பிறரால் களவாடவோ, கவரவோ முடியாதது. எனவே ஞானம் நம்முள் அமைய, நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்வோம்.

இன்றைய நற்செய்தியில், விண்ணரசு எவ்வாறு இருக்கும் என்பதை பத்துத் தோழியர் உவமை வாயிலாக வெளிப்படுத்துகிறார் இறைமகன் இயேசு. மணமகனாகிய இயேசுவை வரவேற்க எண்ணெய் நிரம்பிய விளக்குகள் போல் நம் எண்ணங்கள் தெளிவாகவும், திடனாகவும் இருத்தல் வேண்டும். நமது செயல்கள் இறைவனை வரவேற்க உகந்ததாக இருத்தல் அவசியம். தோரணங்களும் தூபங்களும் இறைவனுக்கு மகிழ்வை ஏற்படுத்தாது. அவர் வரும் நாளுக்காக நம்மை ஒளியால் நிறைத்துக் கொண்டால் மட்டுமே நாம் அவரின் அரசிற்குள் பிரவேசிக்கலாம். நமது செயல்பாடுகள் எண்ணெயுடன் கூடிய விளக்குகள் போல் ஒளி பொருந்தியதாக இருக்க வேண்டும். அப்போதுதான் இறையரசிற்குள் நாம் நுழைய தகுதியைப் பெற்றிடுவோம். இச்சிந்தனைகளை மனதிற்தாங்கி இப்பலியில் இணைவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. இறைமகனை எதிர்கொள்ள அழைப்பவரே எம் இறைவா!

எம் திரு அவையை வழிநடத்தும் திரு அவைத் தலைவர் மற்றும் திரு அவைப் பணியாளர்கள், ஒளியைத் தரும் விளக்குகளாகத் திகழ்ந்து, ஒளியின் பாதையில் மக்களை வழிநடத்தி, விண்ணரசை அடையும் உன்னத பாதையை மக்கள் அடைய வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. ‘முன்மதியுடையவராய் இருங்கள்’ என்றவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள், நாட்டின் நிலையை நன்கு அறிந்து, பொருளாதாரச் சீர்கேட்டை சரிசெய்து, மக்களை வருத்தாத ஆட்சி புரிய, நல்லறிவு தந்து வழிநடத்திட வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. ‘ஞானத்தைத் தேடி கண்டடையுங்கள்’ என்றவரே எம் இறைவா!

ஞானமே வாழ்வுக்கான வழி என்பதை அறிந்து, பொருள், பணம், பதவி போன்றவற்றை விட ஞானமே நல்வாழ்வைத் தரும் என்பதை எங்கள் சமுதாயம் உணர்ந்து, அதற்கேற்ற வாழ்வு மேற்கொள்ள வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. விண்ணகக் கதவுகளைத் திறந்து மண்ணகத்தைப் புதுப்பிப்பவரே எம் இறைவா!

எம் பகுதியில் பருவ மழை பொழிந்து, நீர்நிலைகள் நிரம்பவும், வேளாண்மை சிறக்கவும், குடும்பங்களில் அமைதி, மகிழ்ச்சி நிறையவும், படிக்கும் மாணவர்களின் எதிர்காலம் தெளிவாகவும், சிறப்பாகவும் அமையவும், வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உமதருளால் பெற்று மகிழும் வரம் அருளவும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com